சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி - சிறைத்துறையில் கருணையடிப்படையில் பணிநியமனம் – திரு. ரா. சுபாஷ் சந்திர போஸ் (தந்தை பெயர் திரு. எஸ். ராஜாராம் மோகன் (லேட்), முதல் நிலைக் காவலர்) கடலூர், மத்திய சிறை கட்டுப்பாட்டிலுள்ள பரங்கிப்பேட்டை கிளைச் சிறை - சிறைத்துறையில் இளநிலை உதவியாளராகப் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது – அன்னாரின் பணியினை வரன்முறை செய்து - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

உள் (சிறை-II) துறை

அரசாணை (3ப) எண்.127

நாள்.: 10.10.2023
சோபகிருது வருடம், புரட்டாசி 23
திருவள்ளுவர் ஆண்டு – 2054

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்.யு.1)த் துறை, நாள். 23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வாய்ப்பு (க்.யு.1)த் துறை, நாள். 26.02.2021.
3. காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் அவர்களின் கடித எண்.39444/இஎஸ்.2/2014, நாள். 19.07.2021.

*******

ஆணை:

கடலூர், மத்திய சிறை கட்டுப்பாட்டிலுள்ள பரங்கிப்பேட்டை, கிளைச் சிறையில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்த திரு. எஸ். ராஜாராம் மோகன் என்பவர் 28.06.2005 அன்று மரணமடைந்ததை தொடர்ந்து, அவரது மகன் திரு. ரா. சுபாஷ் சந்திர போஸ், என்பவர் கருணை அடிப்படையில் பணி கோரி 07.09.2005 நாளிட்ட விண்ணப்பம் மூலம் விண்ணப்பித்திருந்தார் எனவும், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் கருணை அடிப்படையில்

தற்காலிக இளநிலை உதவியாளர் பதவிக்கு விண்ணப்பித்த நாளில் அனைத்து தகுதிகளும் பெற்றிருந்ததால், முதுநிலைப் பட்டியலில் இவரது பெயர் சேர்க்கப்பட்டு, தற்காலிக இளநிலை உதவியாளராக சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறையில் பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, தனியர் பணி நியமனம் செய்யப்பட்ட நாளான 04.08.2021 முற்பகல் முதல் முற்றிலும் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார் என்றும் தனியரின் பணியினை வரன்முறை செய்து அரசாணை பிறப்பிக்குமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் காவல் துறை இயக்குநர் / தலைமை இயக்குநர், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கருணையடிப்படையில் பணி நியமனம் கோரி மூன்றாண்டுகளுக்குள் விண்ணப்பம் செய்ததுடன், 18 வயதினையும் அன்னார் அப்போதே பூர்த்தி செய்துள்ளார். மேலும், தனியர் பணி நியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர் பதவிக்கான கல்வித்தகுதி மற்றும் இதர தகுதிகளை பெற்றுள்ளார்.

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனம் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்தப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் அவர்களின் செயற்குறிப்பை உரிய ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களுடன் அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. திரு. ரா. சுபாஷ் சந்திர போஸ் என்பவர் 31.12.2019-ற்கு பிறகு, சிறைத் துறையில் 04.08.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளதால், அவர் பணியில் சேர்ந்த நாளான 04.08.2021 முற்பகல் முதல் பணிவரன்முறைபடுத்த அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை

செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார் எனவும் ஆணையிடப்படுகிறது.

5. இது தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ. சா. எண். 6132, நாள். 27.07.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ. சா. எண். 6132, நாள். 28.08.2023 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ. அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:
காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர்,
சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள், சென்னை – 600 008.
திரு. ரா. சுபாஷ் சந்திர போஸ், இளநிலை உதவியாளர்,
சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை,
தலைமை அலுவலகம், சென்னை – 600 008.
(காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர்,
சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் மூலமாக)
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 600 018.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 600 005.

நகல் :
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
சென்னை – 600 009.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை – 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்